# வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்.

(மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு கல்வி வலயத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

LIBRARY
12 OCT 2009
Eastern University, Sri Lanka

திருமதி. சுதர்சினி ஜிறிஸ்கந்தராஜா
பதிவு இல :- **EU/PGS/MED/2007/35**

MED24
Thesis
Library - EUSL

கல்வி, பிள்ளை நலத் துறை
கலை, கலாசார பீடம்.
கிழக்கு பல்கலைக்கழகம்.
இலங்கை.
2008

PROCESSED
Main Library, EUSL

<u>பொருளடக்கம்</u>

| | | |
|---|---|---|
| 1. | ஆய்வாளர் உறுதியுரை. | 1 |
| 2. | நெறியாளர் சான்றிதழ். | 11 |
| 3. | நன்றியுரை | 111 – 1v |
| 4. | ஆய்வின் சுருக்கம் | v - v1 |
| 5. | இயல் ஒன்று | 1 - 20 |
| 6. | இயல் இரண்டு | 21 - 52 |
| 7. | இயல் மூன்று | 53 - 71 |
| 8. | இயல் நான்கு | 72 - 101 |
| 7. | இயல் ஐந்து | 102 - 108 |
| 8. | உசாத்துணைகள் | 109 - 111 |
| 9. | பின்னிணைப்புக்கள் | 112 - 120 |

# ஆய்வின் சுருக்கம்.

கட்டிளமைப் பருவ மாணவர்கள் அறிவு, தொழில்முறையியல் என்பன நாள்தோறும் விருத்தியடையும் தற்கால உலகைத் திறந்த மனதோடு நோக்கவும் வகுப்பறைக்கு வெளியே புத்தாக்கச் சிந்தனையுடன் தம் கற்றற் செயற்பாடுகளை ஆற்றவும் வேண்டும். இதற்கு வினைத்திறனும் விளைதிறனும் பொருந்திய கற்றல் - கற்பித்தல் செயன்முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கமைய 1998 இல் அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தத்தின்படி க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு "வாழ்க்கைத் தகைமை விருத்திச் செய்திட்டங்கள்" அறிமுகம் செய்யப்பட்டது. இது அறிமுகஞ் செய்யப்பட்டு சுமார் 10 வருடங்கள் நிறைவுறுகின்ற நிலையில் செயற்பாடு ரீதியாக இது நடைபெறுகின்ற முறையை அவதானிக்கும்போது திருப்திகரமான நிலை இல்லை என்றே பொதுவாகக் கூறப்படுகின்றது. இதனடிப்படையில் வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது மாணவர்களும் ஆசிரியர்களும் எவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர் என்பதைக் கண்டறிவதையே பிரதான நோக்கமாக இவ்வாய்வு கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள 30 கல்வி நிர்வாக மாவட்டங்களுள் மட்டக்களப்பு கல்வி நிர்வாக மாவட்டமும் ஒன்றாகும். இம்மாவட்டத்திலுள்ள நான்கு கல்வி வலயங்களுள் பட்டிருப்புக் கல்வி வலயம் ஆய்வுப் பிரதேசமாக இங்கு கருதப்பட்டுள்ளது. இக்கல்வி வலயத்திலுள்ள 19 உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளிலும் 1916 மாணவர்கள் 2007 ம் ஆண்டில் தரம் 12,13இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். இவர்களில் மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டத்திலுள்ள 11 பாடசாலைகளில் 1485 மாணவர்கள் தரம் 12,13 இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். இவர்களில் 100 மாணவர்கள் நான்கு பாடசாலைகளிலிருந்து மாதிரி எடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கும்போதும், ஆசிரியர்கள் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும்போதும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை அறிந்து கொள்வதற்காகவும், அவற்றிற்கான தீர்வுகளை முன்வைப்பதற்காகவும் ஆய்வாளரினால் ஆய்வுக்கருவி தயாரிக்கப்பட்டது. இது க.பொ.த உயர்தர் மாணவர்கள் செயற்றிட்டத்தை முன்னெடுக்கும்போதும், ஆசிரியர்கள் அதனை நடைமுறைப்படுத்தும்போதும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை அறிந்து கொள்ளும் முகமாக அமைந்திருந்தது.

இவ்வாய்வுக்கு உட்படுத்தப்படும் மாணவர்களை ஒத்த 20 மாணவர்களும், 05 ஆசிரியர்களும் மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டு முற்சோதனை (Pilot studies) நடாத்தப்பட்டது. இவர்களின் துலங்கல்களின் அடிப்படையில் பொருத்தமற்ற வினாக்கள் நீக்கப்பட்டும், வினா அமைப்பை மாற்றியமைத்தும் வினாக்கொத்து தயாரிக்கப்பட்டது.

இவ் வினாக்கொத்துக்கள் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டதுடன் நேர்காணல், கலந்துரையாடல், ஆவணப் பகுப்பாய்வு முறைகள் மூலமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு தரவுப் பகுப்பாய்வு மூலம் வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதில் ஆசிரியர்களும், மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் இனங்காணப்பட்டுள்ளன. மேலும் இப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான பல ஆலோசனைகள் இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.